திரு. என். டென்னிஸ் : தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக மலைப் பிரதேசத்தில் வேலை செய்கின்ற காரணத்தால், அவர்கள் அதிக சிரமமான வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆதலால், அவர்களுக்கு ப்ராஃபிட்-கம்-போனஸ் ஷேர் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்பொழுது அது போன்ற ஒரு திட்டம் இல்லை. ஆனாலும், கனம் உறுப்பினருடைய யோசனை சமயம் வாய்க்கும்போது நினைவில் கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, காபி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதுபோன்று, அரசாங்க ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 1965-ஆம் ஆண்டு, ஊதியக் கொடை வழங்கும் சட்டத்தின் 32-ஆவது பிரிவின்படி, இச்சட்டத்தில் கண்டுள்ள, ஒரு மாநில அரசு அல்லது ஒரு உள்ளாட்சி மன்றத்தில் ஏதேனும் ஒரு துறையைச் சார்ந்த அதிகார மன்றத்தினர் அல்லது அதிகார மன்றத்தின்கீழ் நடத்தப்படுகிற தொழிலில் ஈடுபட்டுப் பணிபுரிகின்ற எஸ்டேட்டுகளுக்கு இது பொருந்தாது. இதன்படி அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதியக் கொடை வழங்கும் வினாவுக்கு இடம் இல்லை. அரசாங்க ரப்பர்த் தோட்டத்தில் பணி புரிகின்றவர்களுக்கு ஊதியக் கொடை வழங்கப்படுவது இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ட்ரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கு எக்ஸ்-க்ரேஷியா பேமென்ட் கொடுக்கிறார்கள். அது மாதிரியே அரசாங்க ரப்பர் தோட்டத்தில் வேலை செய்கிறவர்களுக்கும் எக்ஸ்-கிரேஷியா பேமென்ட் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதைப்பற்றி யோசிக்கவேண்டிய சந்தர்ப்பம் வரும்போது கனம் உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்களின் கருத்து நினைவில் கொள்ளப்படும்

1973 மார்ச் 5]

திரு. ஜே. ஜேம்ஸ் : மத்திய அரசாங்கம் இரயில்வே தொழிலாளர்களுக்குக்கூட போனஸ் வழங்குவதற்கான சட்டங்களை வகுப்பதற்கு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாநில அரசாங்கத்தின்கீழ் வேலை செய்யக்கூடிய ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போதுள்ள சட்டப்படி முடியாது. சந்தர்ப்பம் ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினரின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. எஸ். வடிவேல் : எத்தனை தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள், எவ்வளவு போனஸ் பணம் இதுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கப்படும்.

சலூன் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்.

* 239 வினு.—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள சலூன் தொழிலாளர்க்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.

THIRU R. PONNAPPA NADAR : It is not in good taste.

MR. DEPUTY SPEAKER : I expunge all the words.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இப்பொழுது ஷேவிங் கிரீமுக்கு அதிக வரி போட்டிருப்பதால்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.